# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண்: 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண்.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005

28441286 / 28440938 / 28443601 e-mail: tngeastatecenter@gmail.com / web: www.tngea.org



மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஆ.பெரியசாமி**
**கோ.பழனியம்மாள்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**மு.செல்வராணி**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

துணை பொதுச்செயலாளர்கள்
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**தெ.வாசுகி**

மாநிலச் செயலாளர்கள்
**சா.டானியல் ஜெயசிங்**
**உ.சுமதி**
**ச.ஹேமலதா**
**ஆ.அம்சராஜ்**
**சா.கோதண்டபாணி**
**அ.குபேரன்**


கடித எண்.31/2022 நாள்.16.04.2022

பெறுநர்

**மாண்புமிகு தமிழக முதல்வா் அவா்கள்**
தலைமைச் செயலகம்
சென்னை-600009

மதிப்பிற்குரிய ஐயா

வணக்கம்.

பொருள் : அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கோரிக்கைகளை தி.மு.க. தேர்தல் அறிக்கை வாக்குறுதியை நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றிட வலியுறுத்தி 20.04.2022ல் தமிழகம் முழுவதும் அனைத்து வட்டக்கிளைகளிலும் மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்- தொடர்பாக

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் தொடர்ந்து ஊழியர்களின் உரிமைகளுக்காக போராடி வருகிற இயக்கமாகும். அரசு நலத் திட்டங்கள் மற்றும் தமிழகத்தில் ஏற்படும் இயற்கை சீற்றங்களின்போது அரசுக்கு அச்சாணியாக களத்தில் நின்று பணியாற்றும் நாங்கள் மழை, வெள்ளம், புயல், சுனாமி, கொரோனா பெருந்தொற்று போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டபோது தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டங்களில் களத்திற்குச் சென்று மக்களுக்கான உதவிகளை செய்பவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியா் சங்க நிா்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியா்கள். அதுமட்டுமல்ல **“மக்களை நோக்கி பயணம்”** என்ற இலட்சிய நோக்கத்தோடு தமிழகத்தில் படித்த இளைஞர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்பு, மருத்துவ முகாம், கண் தானம், உடல் தானம், கிராமங்களை தத்து எடுப்பது போன்ற சமூகப் பணிகளை செய்து கொண்டு இருக்கிறோம் என்பதை மாண்புமிகு தமிழக முதல்வா் அவா்களின் கனிவான பாா்வைக்குக் கொண்டு வருகிறோம்.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் போராடிப் பெற்ற பல்வேறு உரிமைகள் கடந்த 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பறிக்கப்பட்டன. அந்த கோபம் அகலாத நிலையில் சட்டமன்ற தேர்தலில் கடந்த அரசாங்கம் வீழ்த்தப்பட்டுவிட்டது. மக்களின் பேராதரவோடும், அரசு ஊழியர்களின் பெரும் முயற்சியினாலும்,இடைவிடாத ஊழியா் பிரச்சாரங்களினாலும் தங்களது தலைமையில் தி.மு.க. அரசு பொறுப்பு ஏற்றுள்ளது. இந்தியாவிலேயே மக்கள் சேவையிலும், கொரோனாவில் மக்களை பாதுகாத்ததிலும் சிறப்பான மாநிலமாக தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாடே அறிந்துள்ளது. அரசு ஊழியா்களும் தங்களது கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றித் தருவீா்கள் என்ற எதிா்பாா்ப்போடு இருக்கிறாா்கள். அதற்கு தகுந்தாற்போல் கடந்த இரண்டு ஆண்டுகளாக முடக்கப்பட்ட அகவிலைப்படியை 2021 டிசம்பா் 28ம் தேதியே மாண்புமிகு முதல்வா் அவா்கள் அறிவித்தது மிகுந்த நம்பிக்கையை அரசு ஊழியா்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

2021 டிசம்பர் 18,19 தேதிகளில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாடு சென்னையில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்து கொண்டு அரசு ஊழியர், ஆசிரியர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் தங்களது தலைமையிலான அரசு நிறைவேற்றித் தரும் என்ற நம்பிக்கை அளித்ததோடு அல்லாமல் “அரசு ஊழியர்கள் இல்லை என்றால் அரசாங்கம் இல்லை.” அரசு ஊழியர்கள்தான் அரசாங்கத்தை நடத்தக்கூடியவர்கள் என்று கூறி நான் உங்களுடன் இருக்கிறேன் என்று நம்பிக்கையூட்டி சிறந்த உரையாற்றினீர்கள்.

எனவே,

1. புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியம் வழங்க வேண்டும்.,

2. சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், MRB செவிலியர்கள் உள்ளிட்ட தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் மூன்றரை லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

3. மத்திய அரசு ஊழியர்களுக்கு 01.01.2022 முதல் 3% அகவிலைப்படி அறிவித்துள்ளது. அதுபோல் மாநில அரசு ஊழியர்களுக்கும் தமிழக அரசு உடனடியாக வழங்க வேண்டும்.

4. கொரோனாவை காரணம் காட்டி 2 ஆண்டுகள் முடக்கப்பட்ட சரண் விடுப்பு ஒப்புவிப்பு மேலும் காலம் குறிப்பிடாமல் தடை செய்ததை உடன் திரும்ப பெற வேண்டும்.,

5. சாலைப் பணியாளர்களின் 41 மாத பணி நீக்கக் காலத்தை பணிவரன்முறை செய்திட வேண்டும்.,

6. தமிழக அரசுத் துறைகளில் காலியாக உள்ள 4 லட்சத்திற்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களை போர்க்கால அடிப்படையில் நிரப்பிட வேண்டும்.,

7. 21 மாத ஊதிய மாற்ற நிலுவையை வழங்கிட வேண்டும்.,

8. WIPRO வசம் உள்ள IFHRMS திட்டத்தில் உள்ள குளறுபடிகள் மற்றும் குறைகளை சரி செய்து தமிழக அரசே ஏற்று நடத்த வேண்டும்.,

9. புதிய மருத்துவக் காப்பீடு திட்டத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும். 2 ஆண்டுகளாக விடுவிக்கப்படாத கொரோனா சிகிச்சைக்கான தொகையை உடனே விடுவிக்க வேண்டும்.,

10. கொரோனா காலத்தில் இறந்த அரசு ஊழியர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு நிபந்தனையின்றி கருணை அடிப்படை பணி நியமனம் வழங்கிட வேண்டும்.,

உள்ளிட்ட கோரிக்கைகளை நடப்பு சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே நிறைவேற்ற வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பாக தமிழகம் முழுவதும் அனைத்து வட்டக்கிளைகளிலும் 20.04.2022(புதன் கிழமை) மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது என்பதை தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

**(மு. அன்பரசு)**
மாநிலத் தலைவர்
செல்.9840187508

**(ஆ. செல்வம்)**
பொதுச் செயலாளர்
செல்.9443930500

நகல்

1. **தலைமைச் செயலாளர்**
   தமிழ்நாடு அரசு, சென்னை-600009
2. **அரசுச் செயலாளர்**
   மனித வள மேலாண்மைத்துறை
   தமிழ்நாடு அரசு,சென்னை-600009